- 1 MAR 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 18 புதன்கிழமை (01 - 03 - 2000) VALAMPURI ஒலி: 73

★ இனப்பிரச்சினை தீர்வில் திருப்பம்

# புதுவருடப்பிறப்புடன் அரசு-புலிகள் பேச்சு?

## விரைவில் அரசகுழு ஒஸ்லோ பயணம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சு வார்த்தையின் முதற்கட்டமாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பெயர் குறிப்பிடப்படாத ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் பேச்சுவார்த்தைகளை நடத்த இருப்பதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

இப்பேச்சுவார்த்தை எதிர்வரும் புதுவருடப்பிறப்போடு நடைபெறலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலிபேக்கை ஒஸ்லோவில் சந்தித்துப் பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்தும் ஒஸ்லோவிலேயே தங்கியுள்ளமை புதுவருடப்பிறப்போடு முதற்கட்ட பேச்சுக்களை அரசும் விடுதலைப்புலிகளும் ஆரம்பிக்கப் போவதை உறுதி செய்வதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்,

இது இவ்வாறிருக்கஇலங்கை அரசின் சார்பாக உயர்மட்ட தூதுக்குழு ஒன்று இம்மாதக் கடைசியில் ஒஸ்லோ செல்ல விருப்பதாக தெரியவந்துள்ளது.

தகவல் தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகளுடன் பேசுமானால் யுத்தக் கைதிகளை விடுவிக்க முடியும்

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசுமானால் உண்ணாவிரதமிருந்த ஏனைய பதினொருயுத்தக் கைதிகளையும் விடுவிக்கமுடியும். இவ்வாறு வன்னியில் உண்ணாவிரதமிருந்த யுத்தக்கைதிகளைப் பார்வையிட்ட பின் நேற்று தென்னிலங்கை திரும்பிய சாகர வர்த்தனா கப்பல் கப்டன் போயா கொடவின் மனைவி சாந்தினி போயா கொட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தாம் வன்னியில் தங்கியிருந்த போது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்ததாகவும் அச் சந்திப்பில் யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரச பிரதிநிதிகளே பேச்சு வார்த்தைக்கு வரவேண்டுமெனவும், சமயப் பிரதிநிதிகளுடன்இது விடயமாக தாம் பேசுவதற்கு தயாரில்லை எனவும் அவர் கூறியதாகவும் சாந்தினி போயா கொட தெரிவித்தார்.

இதே வேளை உண்ணாவிரதிகளின் பெற்றோர்களில் ஒருவரான எல்.ஏ.ரண்பண்டா என்பவர் தனது வன்னிப் பயணம் பற்றிக் கூறுகையில்:

[6 ஆம்பக்கம் பார்க்க]

## இரண்டு மைல்தூரம் கடலில் மீன்பிடிக்க இன்று காலை 5மணி முதல் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலேரியில் மீன் பிடிப்பதற்கு இன்று முதல் அனுமதிக்கப் பட்டுள்ளதாக மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

காலை 5மணிமுதல் மாலை 4 மணிவரையும் இரண்டு மைல்கள் தூரத்திற்கு சென்று மீன்பிடிக்க முடியும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-6)

சாரதாம்பாள் படுகொலை

## விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவு!

(கொழும்பு)

புங்குடுதீவில் பாலியல் வல்லுறவின்பின் படுகொலை செய்யப்பட்ட சாரதாம்பாள் படுகொலை குறித்து இரகசிய பொலிஸார் விசாரணை செய்து அறிக்கை ஒன்றை விரைவில் சமர்ப்பிக்க வேண்டுமென தொல்லைதவிர்ப்புக் குழு கடுமையான உத்தரவை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக் குழுவின் கூட்டத்தில் அமைச்சர் பட்டி வீரக்கோன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன் எம். எம். ஸீஹைர், ஆர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு காயங்கேணியில்

## ரோந்து சென்றபடைமீது புலிகள்தாக்குதல் இரு படையினர் கொல்லப்பட்டனர்

(மட்டக்குழி)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள காயங்கேணிக் கிராமத்தில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலில் இரு படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

புலிகளின் தாக்குதலை அடுத்து அங்கு இடம்பெற்ற மோதலில் சிக்கி 4 வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சொந்தப்பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிகேட்டு வழக்குத்தாக்கல்!

(கொழும்பு)

சொந்தப்பிரதேசத்தில் குடியிருப்பதற்கு அனுமதி கோரி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தற்போது மொறட்டுவவில் இருக்கும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வி. கணேசலிங்கம் என்பவரே இவ்வாறு வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

சொந்தப் பிரதேசத்தில் குடியிருக்க அனுமதிக்காமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக்கைதிகளின் விடுதலை விடயத்தில் உறவினர் அழுத்தம் கொடுப்பர்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் நெருக்குதல்களைக் கொடுக்கப்போவதாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள நோர்வே நாட்டு கொழும்புத் தூதரகம் உட்பட ஏனைய வெளிநாட்டுத் தூதரகங்கள் மூல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் உயிரிழந்ததாக இருசடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப்பகுதியில் நேற்று முன்தினம் காலை 9.00மணியளவில் இடம்பெற்ற மோதலில் பலியானதாக தெரிவித்து இரு யுவதிகளின் சடலங்கள் பளைப் பொலிஸாரால் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

மேற்படி சடலங்கள் இராணுவ சீருடையில் காணப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரப்பிரகாஷ் கொலை வழக்கு இம்மாதம் 15ஆம் திகதி விசாரணை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீடமாணவன் எஸ். வரப்பிரகாஷின் கொலைவழக்கு, இம்மாதம் 15ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதைக் கண்டி பிரதம நீதிவான் லியோன் செனிவிரட்னா தெரிவித்துள்ளார்.

யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் எஸ். வரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரணி வடக்குப்பகுதியில் இருவரைக் காணவில்லை!

வரணி வடக்கைச் சேர்ந்த இருவரை கடந்த 21 ஆம் திகதி முதல் காணவில்லை என வரணி இராணுவ முகாமிலும் கிராமசேவகரிடமும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

குணபாலசிங்கம் சாந்தகுமார் (வயது 15) என்பவர் காணாமல் போனது தொடர்பாக அவரது தாயார் பத்மாவதி முறைப்பாடு செய்துள்ள அதே வேளை இராஜேந்திரம் றெஜிக்குமார் (வயது 25) என்பவர் தொடர்பாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (வ-4)

## யாழ். பஸ் நிலையப் பகுதிக்கடைகள் அப்புறப்படுத்த காலக்கெடு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் நிலையப் பகுதியில் உள்ள கடைகளை அப்புறப்படுத்துவதற்கான காலக்கெடுவை மார்ச் மாதம் 20 ஆம் திகதிவரைபிற்போட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

சிவதொண்டன் சபையினர் வெளியீடு திருவாசகம், தாயுமானவர் பாடல் நற்சிந்தனை தமிழ் நூல்கள் இருக்கின்றன தொடர்பு க. இராசரத்தினம் 135, சிவன் கோவில் முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம் நேரம் மாலை 2.00-6.00 வரை.

(198)

### விற்பனைக்குண்டு

தமிழ் தட்டச்சு றோணியோ இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு மாலை 3 மணிக்குப்பின்பு திகழ் கல்வி நிலையம் கே. கே. எஸ். றோட் இணுவில்.

(200)


## பழைய மாணவர் பொதுக்கூட்டம்

(அரியாலை)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மார்ச் மாதம் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரேரணைகள் ஏதும் இருந்தால் 5ம் திகதிக்கு முன்னர் தனக்கு அனுப்பிவைக்குமாறும் அங்கத்தவர் அனைவரையும் மேற்படி பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் படியும் செயலாளர் அறிவிக்கிறார்.

(க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(க-3)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பல்கலைக்கழக விசேட அனுமதி 1999/ 2000

1999/ 2000 கல்வி யாண்டுக்கு விசேட பாட அனுமதியில் மொழியியல், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தோர் தேர்வுகளும் அனுமதிகளும் கிளை பிரதிப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு, உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து, பதிவினை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்

(கி-104)


விடுதலைப்புலிகள்- அரசு

# பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு அமைதிநிலை பேணப்பட வேண்டும்

## -பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் - அரசு பேச்சுவார்த்தைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வடக்கு கிழக்கில் ஓடும் இரத்த ஆறு நிறுத்தப்பட வேண்டுமென பிரதி அமைச்சர் எம். ஏ. எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் 2 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பிரதேச செயலக கட்டடத்தை திறந்து வைத்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வடக்குகிழக்கு மாகாண பிரதம செயலாளர், மாவட்ட செயலாளர், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட மாநகர முதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென்று ஒன்றுமில்லை. அப்பகுதியில் வாழ்பவர்களும் மக்களே-அப்பகுதி அபிவிருத்தி செய்யப்படும் போதுதான் ஏனைய பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பில்லாமல் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதனையுமே செய்ய முடியாது. புலிகள் விரும்பாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்றார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்தஏனைய மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வி கண்டாலும் எவ்வாறாவது வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென ஜனாதிபதி செயற்படுகின்றார்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (க-60)

# வெறும் ஏட்டுக் கல்வியால் மட்டும் மனிதன் பூரணத்துவம் அடைய முடியாது

## கோட்டக் கல்வி அதிகாரி தெரிவிப்பு

(நெடுந்தீவு)

வெறும் ஏட்டுக்கல்விமட்டும் இருந்தால் மனிதன் பூரணத்துவம் அடைய முடியாது. இன்றைய சமூகத்தில் அனைவரும் கல்வி, ஆய்வு இவையிரண்டிலும் நோட்டுப் புத்தகங்களைமனனம் செய்துவிட்டு குறும்பார்வையுடன் சமூகத்தில் நடமாடுகின்றார்கள்.

இந்த நிலமை முற்றுமுழுதாக மாறி உடலையும் உள்ளத்தையும் பேணும் பொருட்டு அன்றாடம் பயிற்சியைப் பெற்று வருடத்தில் சில தடவைகள் மட்டும் நிகழ்கின்ற இவ்வாறான போட்டிகளில்தங்கள் திறமைகளை மக்கள் முன் வெளிக் கொணர வேண்டும்.

மேற்கண்டவாறு நெடுந்தீவு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் தலைமை வகித்து உரையாற்றியகோட்டக்கல்வி அதிகாரி திரு. க. அரசரத்தினம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்; விளையாட்டுக்களின் மூலம் மாணவர்கள் புரிந்துணர்வு சகிப்புத்தன்மை சகோதரத்துவம் தலைமைத்துவப்பண்புகள் போன்றவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். (க)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம் மாதம் 29 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 121643 ஏ | 123375 ஏ |
| 123375 பி | 123375 சி |
| 127387 ஏ | 129017 ஏ |
| 130733 ஏ | 130733 பி |
| 135611 ஏ | 135632 ஏ |
| 135675 ஏ | 135675 பி |
| 135729 ஏ | 135729 பி |
| 135780 ஏ | 135780 பி |
| 135858 ஏ | 135898 ஏ |
| 135957 ஏ | 135971 ஏ |
| 138109 ஏ | 138140 ஏ |
| 138140 பி | 138166 ஏ |

சாவகச்சேரி

| | |
|---|---|
| 126033 ஏ | 126033 பி |
| 130540 ஏ | 131461 ஏ |
| 131461 பி | 131461 சி |
| 135433 ஏ | |

கரவெட்டி

| | |
|---|---|
| 129529 ஏ | 129529 பி |

கோப்பாய்

| | |
|---|---|
| 134189 ஏ | 136438 ஏ |
| 136438 பி | 136783 ஏ |

நல்லூர்

| | |
|---|---|
| 128091 ஏ | 128091 பி |
| 128091 சி | 128092 ஏ |
| 128321 ஏ | 128324 ஏ |
| 128324 பி | 128324 சி |
| 128324 டி | 128324 ஈ |
| 128330 ஏ | 121768 ஏ |
| 121768 பி | 127373 ஏ |
| 131609 ஏ | 131678 ஏ |
| 131678 பி | 134830 ஏ |
| 134830 பி | 134830 சி |
| 135500 ஏ | 135514 ஏ |
| 135514 பி | 135525 ஏ |
| 135582 ஏ | 135583 ஏ |
| 135642 ஏ | 135642 பி |
| 135642 சி | 135703 ஏ |
| 135703 பி | 135745 ஏ |
| 135745 பி | 135745 சி |

| | |
|---|---|
| 135843 ஏ | 135843 பி |
| 135861 ஏ | 135861 பி |
| 135916 ஏ | 135944 ஏ |
| 135950 ஏ | 135950 பி |
| 135950 சி | 138085 ஏ |
| 138088 ஏ | 138094 ஏ |
| 138116 ஏ | 138116 பி |
| 138177 ஏ | |

பருத்தித்துறை

| | |
|---|---|
| 131448 ஏ | |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 130770 ஏ | 131744 ஏ |
| 131744 பி | 131810 ஏ |
| 135505 ஏ | 135537 ஏ |
| 135537 பி | 135537 சி |
| 135621 ஏ | 135621 பி |
| 135649 ஏ | 135777 ஏ |
| 135785 ஏ | 135830 ஏ |
| 135869 ஏ | 135888 ஏ |
| 135892 ஏ | |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 134268 ஏ | 134268 பி |
| 129016 ஏ | 129067 ஏ |
| 131672 ஏ | 131673 ஏ |
| 131717 ஏ | 131846 ஏ |
| 135862 ஏ | 135893 ஏ |
| 138086 ஏ | 138234 ஏ |
| 138234 பி | 138234 சி |

உடுவில்

| | |
|---|---|
| 134130 ஏ | 134130 பி |
| 134130 சி | 134222 ஏ |
| 134222 பி | 134222 சி |
| 134271 ஏ | 136312 ஏ |
| 136313 ஏ | 129481 ஏ |
| 129482 ஏ | 130565 ஏ |
| 130569 ஏ | 130661 ஏ |
| 130661 பி | 131582 ஏ |
| 131866 ஏ | 134531 ஏ |
| 134531 பி | 135508 ஏ |
| 135509 ஏ | 135509 பி |
| 135585 ஏ | 135724 ஏ |
| 135724 பி | 135725 ஏ |
| 135747 ஏ | 135820 ஏ |
| 135820 பி | 135820 சி |
| 135851 ஏ | 135851 பி |
| 135852 ஏ | 135901 ஏ |
| 135949 ஏ | 138091 ஏ |
| 138150 ஏ | 138151 ஏ |
| 138171 ஏ | 138229 ஏ |

## திருவிழா

[மந்திகை]

சக்கோட்டை புனிதபிரான் சிஸ்கு சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை 4 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இத் திருவிழா தொடர்ந்து 9 நாட்கள்நடைபெற்று 13 ஆம் திகதி அதிகாலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-23)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 2ஆம் திகதி வியாழக்கிழமைபி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு, தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் மு.வ.செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## எல்லே சுற்றுப் போட்டி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குஉட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் கடந்த 27ஆம்திகதி நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் துன்னாலை ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை, இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணிவென்று சாம்பியனானது. (செ-27)

## கரப்பந்தாட்டப் போட்டி

(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டப் போட்டிகளில், 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் இன்று பி. ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து வல்லை சிவகுரு வித்தியாலயமும், இமையாணன் அ. த. க. வித்தியாலயத்தை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளது.

இக்கரப்பந்தாட்டப் போட்டி விக்னேஸ்வராக் கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது. (செ-27)

## (இராசி பலன்)

01.03.2000
புதன்கிழமை
(தமிழுக்கு மாசி - 18)

ஏகாதசி நாள் முழுவதும், பூராடம் நடுநிசி 12.57 வரை, அமிர்தயோகம், இராகுகாலம் பகல் 12.39 முதல் 2.27 வரை, சுபநேரம் மாலை 5.25 முதல் 6.63 வரை, ஸ்மார்த்த ஏகாதசி விரதம்.

**மேடம்:**
நண்பர்பகை, தொழில் மந்தம், வீண்வாதம்.

**இடபம்:**
மனப்பதட்டம், தொழில் முடக்கம், அலைச்சல்.

**மிதுனம்:**
கற்பனைமிகுதி, குடும்ப சுகம், அயலவர் உதவி,

**கடகம்:**
அதிகாரிகள் பாராட்டு, தாய்வழிச்சுகம், தியானம்.

**சிங்கம்:**
போட்டி மனப்பான்மை, முயற்சித்தடை, வெறுப்பு.

**கன்னி**
வாய்ப்புநழுவுதல், மன்ப் போராட்டம், மனைவி சினம்.

**துலாம்:**
மனவெழுச்சி, கடன்வரவு. உல்லாசம்.

**விருச்சிகம்:**
ஆசாரக்குறைவு. தொழில் நஷ்டம், ஆவேசம்.

**தனுசு:**
எதிர்பாராத உதவி, அறிஞர் ஆசி, காதல் சிறப்பு.

**மகரம்:**
வீண் பிரச்சினை. மன முறிவு. அகால உணவு.

**கும்பம்:**
இனியநினைவுகள், பண வரவு, நல்லோர்சந்திப்பு.

**மீனம்:**
புதியசிந்தனை, சுற்றத்தவர் மதிப்பு, வினோதப் போக்கு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## உதவி ஆணையர் நெடுந்தீவு விஜயம்

(நெடுந்தீவு)

உள்ளூர் ஆட்சிமன்றங்களின் உதவி ஆணையாளர் எஸ். கிருஷ்ணசாமி அண்மையில் நெடுந்தீவுப் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவ் விஜயத்தின் போது, கிராமமட்டத்தில் சனசமூக நிலையங்களின் பணி பற்றியும், பாலர் முன்பள்ளிகளை அங்கு ஆரம்பிப்பது பற்றியும் பலவித ஆலோசனைகளை முன்வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

(க-82)

## சொந்தஇடம் திரும்பும் மக்கள்

(ஈச்சமோட்டை)

கடந்தகாலபதற்ற சூழ்நிலை காரணமாகக் கரையோரப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்துவந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத்திரும்பத் தொடங்கியுள்ளனர்.

பாஷையூர், கொழும்புத் துறையைச்சேர்ந்த மக்களே இவ்வாறு மீளக்குடியேறுபவர்களாவார்.

அண்மைக்காலத்தில் மீன்பிடிக்கான தடைநீக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதான செய்திகளைத் தொடர்ந்தே இவர்கள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்புவதாகத் தெரியவருகின்றது.

(க-59)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### தரம் III அதிபர் பதவிஉயர்வு

## நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தரம் - III இல் கடமை புரியும் பாடசாலை அதிபர்களின் பதவி உயர்விற்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரும் மகஜர் ஒன்று ஜனாதிபதி, கல்வி அமைச்சு, கல்விச் சேவைகள், ஆணைக்குழு, வடக்கு-கிழக்குமாகாணசபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வடபகுதி அதிபர் சங்கப் பிரமுகர் அ. செல்லையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தாது வேறு இடங்களில் நடாத்துவதனால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் சில தினங்களில் சாதகமான பதில்கிடைக்குமெனவும் நம்பிக்கை வெளியிட்டார். (க)

### சிவராத்திரி தினத்தன்று

## மட்டு. மக்கள் சோதனைச் சாவடியூடாக இரவில் செல்வதற்குபடையினர் அனுமதி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மகா சிவராத்திரி தினத்தன்று நள்ளிரவு நேரத்திலும் இராணுவ பொலிஸ் சோதனைச் சாவடிகளூடாக பொது மக்கள் சென்று வர படைத்தரப்பு அனுமதிவழங்கி உள்ளது.

அன்றைய தினம் இந்துக்கள் நான்கு சாமப் பூசைகளில் ஈடுபடுவதற்காக இந்தசலுகையை படைத்தரப்பு வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா மாவட்ட பாதுகாப்புஇணைப்பதிகாரி பிரிகேடியர் ஏ.ஆர். எம். லக்கி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலஹேக ஆகியோருடன் நடத்திய பேச்சையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-60)

# பருத்தித்துறை இலங்கை வங்கி

# விவசாயிகளுக்கு 41.இலட்சம் உதவி

(புலோலி)

பருத்தித்துறை இலங்கை வங்கி, புலோலி மேற்கு, புலோலி தென்மேற்குப்பகுதி விவசாயிகளுக்கு வெங்காயச் செய்கைக்கு 41 இலட்சம் ரூபாவை கடனாக வழங்கி உதவியுள்ளது.

1999 / 2000 ஆண்டு பருவ காலக் கடன் திட்டத்தின் கீழ் 270 விவசாயிகள் இந்த 41 இலட்சம் ரூபாவையும் கடனாகப் பெற்று வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை வங்கியின் விவசாய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் புலோலி மேற்குப் பகுதி விவசாயிகள் கூடிய கடன் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

கடந்த பலவருடங்களாக தொடர்ந்து இலங்கை வங்கியின் இவ்விவசாய அபிவிருத்திக் கடன் உதவிகளைப் பெற்றுவரும் புலோலி மேற்குப்பகுதி விவசாயிகளுக்கு அவர்கள் செய்கை பண்ணும் பரப்பளவுகளுக் கேற்ப இம்முறை அதிகரித்த கடன் தொகையினை வழங்கியிருப்பதாக பருத்தித்துறை இலங்கை வங்கியின் முகாமையாளர் திரு. எஸ். நடராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (க-52)

### சிறுவர் உரிமை தொடர்பாக

## கொழும்பு கத்தோலிக்க சபையினர் பாதயாத்திரை நடத்தத்திட்டம்

(கொழும்பு)

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறும் வகையில் சமாதான பாதயாத்திரை ஒன்றினை நடாத்த கொழும்பு கத்தோலிக்க தகவல் நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

1500 மாணவர்கள் பங்கு கொள்ளும் இப் பாதயாத்திரை ராசமை சென்பீற்றஸ், சென்போல்ஸ் தேவாலயங்களில் இருந்து தேவத்தை தேவாலயம் வரை இடம்பெறவுள்ளது.

இதேசமயம்-

இதுபோன்ற பாதயாத்திரையை ஏற்பாடு செய்வது இதுவே முதல் தடவை என கத்தோலிக்கத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (க-9)

## பயன்தரும் மரங்கள் அழிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள அம்பன்பகுதியில் இருந்து நாகர்கோவில் பகுதி வரையான பயன்தரு மரங்களை படையினர் அழித்து வருவதாகக்கூறப்படுகிறது.

படையினரின் இத்தகைய செயற்பாடுகள் இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை பின்னடையச்செய்யலாமெனகருத்துத்தெரிவிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (க-43)

## தலைமைத்துவ பயிற்சி நெறி

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்ட அலுவலகத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் கழக நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி ஊர்காவற்றுறை வேலணை பிரதேச செயலர் பிரிவுகளில் நடைபெற்றது.

கடந்த 24, 25, 26ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பிரிவு இளைஞர் சேவை அலுவலர் க. நித்தியானந்தன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் 21 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 50 இளைஞர் யுவதிகள் பங்குகொண்டனர். (க-75)

# சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் 8 பேர் படுகாயம்! கட்டடம் சேதம்

### புதுடில்லியில் அனர்த்தம்

(புதுடில்லி)

புதுடில்லி ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் அண்மையில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட கட்டடத்தின் பெரும்பகுதி சேதமடைந்ததுடன், அருகிலுள்ள மாளிகை ஒன்றும் சிறிதளவு சேதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விருந்தினர் மாளிகையின் மூன்றாம் மாடியில் ஒரு அறையில் வைக்கப்பட்ட குண்டேவெடித்தது என்றும் இக்குண்டு வெடிப்பின் சூத்திரதாரி யார் என்பது குறித்த விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவத்தை அடுத்து அப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### தாய்லாந்தில் இராணுவத்தினரின்

# உலங்கு வானூர்தி விபத்து! தளபதி உட்பட 11 பேர் பலி!!

(பாங்கொக்)

தாய்லாந்து இராணுவத்தின் ஒன்பதாவது படைப்பிரிவைச் சேர்ந்த முக்கிய பல அதிகாரிகள் உட்பட 11 பேருடன் புறப்பட்ட உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம்செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். 10 பேரின் சடலம் மீட்கப்பட்டது.

காஞ்சன்பூர் மாகாணத்தில் தாமானோ பகுதி ஒன்பதாவது படைத்தளத்தில் இருந்து புறப்பட்ட இவ் உலங்கு வானூர்தி அங்கு நிலவிய மோசமானகாலநிலைகாரணமாகவே விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து மியான்மர் எல்லையில் நிலைகொண்டு உள்ள தாய்லாந்து படைகள் மேற்பார்வை செய்வதற்காகவே அதிகாரிகள் இவ் உலங்கு வானூர்தியில் புறப்பட்டுச்சென்றதாக கூறப்படுகிறது.

ஒன்பதாவது படைப்பிரிவு தளபதி உட்பட முக்கிய தளபதிகள் பலர் இச்சம்பவத்தில் இறந்துள்ளனர்.

இது தாய்லாந்து இராணுவக் கட்டமைப்பிலே பாரிய தாக்கத்தையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தலாம்என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-9)

# பாகிஸ்தானில் வேலைநிறுத்தம் 8 வாகனம் தீக்கிரை!200பேர் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இடம் பெற்ற வேலைநிறுத்தத்தை அடுத்து ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பஸ்கள் உட்பட 8வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 200 பேர் வரையில் கராச்சியில்மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான உருக்கு ஆலையில் கடமையாற்றிய தொழிலாளர்கள் எந்தவித முன் அறிவித்தலுமின்றி இடைநிறுத்தம் செய்யப்பட்டதனை கண்டித்தும் அரசியல் குழு ஒன்றிற்கு எதிராக பொலிஸார் நடந்து கொண்ட முறையைக் கண்டித்தே மேற்படி போராட்டம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரல் முஷாரப் தலைமையிலான இராணுவ ஆட்சி பதவியேற்றபின் நடைபெற்ற முதலாவது வேலை நிறுத்தம் இதுவென வர்ணிக்கப்படுகிறது. (க-9)

### இஸ்ரேல் விஜயம் மேற்கொண்ட

## பிரான்ஸ் பிரதமரின் காரின் மீதுகல்வீச்சு உடன் திரும்புமாறு ஜனாதிபதி உத்தரவு

(பாரிஸ்)

பிரான்ஸ் பிரதமர் லியோனல் ஜோக்டனின் இஸ்ரேல் விஜயத்தின் போது அவர் காருக்கு கல்வீச்சு இடம் பெற்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து பிரான்ஸ் நாட்டு அதிபர் ஜென் விரோக் பிரதமரை உடனடியாக நாடு திரும்பி தன்னைச் சந்திக்குமாறு அவசர அறிவிப்புச் செய்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மேற்கொள்வது தீவிரவாத நடவடிக்கையே என இஸ்ரேல் விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரான்ஸ் பிரதமர் கருத்துத் தெரிவித்ததையடுத்தே பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி கல்வீச்சில் ஈடுபட்டனர் எனநம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன.

கல்வீச்சு இடம்பெற்றதை அடுத்து பாலஸ்தீன அதிபர் ஜசீர் அரபாத் லியோனல் ஜோக்டனை நேரிற் சந்தித்து கல்லெறிச்சம்பவத்திற்கு மன்னிப்புக் கோரி இருப்பதாகவும் வேறு ஒரு செய்தி தெரிவித்துள்ளது. (க.9)

## ஐரோப்பியமனித உரிமைகள் ஆணையாளர் குறொஸ்னிக்கு திடீர்விஜயம்

(இலண்டன்)

ஐரோப்பிய கவுன்சிலின் மனித உரிமைகள் ஆணையாளர் அல்வெறோறியுறோயினிஷின் செச்செனிய தலைநகர் குறோஸ்னிக்கு திடீர்விஜயம்ஒன்றை அண்மையில் மேற்கொண்டுள்ளார்.

செச்செனியாவில் ரஷ்ய படையினர் மேற்கொண்ட அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை நேரில் கண்டறியும் முகமாகவே இவர் குறொஸ்னிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளையில் ஜேர்மன் நிறுவனம் ஒன்று ரஷ்யப் படையினர் செச்செனியாவில் மேற்கொண்ட அட்டூழியங்களை நேரில் சென்று படம் பிடித்து ஒலிபரப்பியதை அடுத்தே இவரது செச்சினிய விஜயம்மேற்கொள்ளப்பட்டதாக பரவலாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கவ-)

## 90வீதமானோர் போதைவஸ்துக்கு அடிமை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் போதைவஸ்துக்கு அடிமையாகி வருபவர்களில் 90வீதமானோர் இளம் பராயத்தினர் எனமலேசிய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (க-9)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 07

★ மஞ்சு தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் ஆவார். ஒருநாள் காலை நேரந் தாழ்த்திப் பாடசாலைக்குச் சென்று ஆசிரியரின் கண்டனத்திற்கு உள்ளானான். மஞ்சு நேரந் தாழ்த்திப் போனமைக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதில் பொருத்தமான காரணத்தை புள்ளிக் கோட்டின் கீழ் எழுதுக?

★ கொதித்தாறிய நீரை அருந்தியமை
★ தங்கையுடன் ஏற்பட்ட முரண்பாடு
★ திடீரென ஏற்பட்ட வயிற்றுவலி
★ நகங்களை வெட்டி சுத்தமாக இருந்தமை
★ சீருடையை அழுத்தி ஆயத்தப்படுத்தலில் ஏற்பட்ட தாமதம்.

(1) ..........................................
(2) ..... ....................................
(3) ..........................................

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

(4) சூரியன் ஒளிரும் பொருள் போல சந்திரன்.
(1) ஒளிரும் பொருள் (2) ஒளிராப் பொருள்
(3) இரவில் மட்டும் வானில் இருக்கும் பொருள்

(5) மண்ணைப் பாதுகாக்கும்மனிதனின் ஒருநடவடிக்கை.
(1) பொலித்தீன் வகைகளை மண்ணில் புதைத்தல்.
(2) இலை, குழை. சருகு, குப்பை, மாட்டுச்சாணம் ஆகியவற்றை மண்ணுள் புதைத்தல்.
(3) களை கொல்லிகளை மண்ணின் மீது வீசுதல்.

**★ இப்பந்தியை வாசித்து விடை தருக?**

அடிக்கடி இடமாற்றம் செய்யப்படாத பூச்சாடிகள், நிலையாகக்காணப்படும். பெருங்கல்லின் கீழ் சிறிய பிராணிகள் சீவிப்பதைக் காணலாம் அவற்றினிடையே விசப்பிராணிகளும் காணப்படும். அவை எல்லாம் நிழலை நாடியே வாழ்கின்றன.

(6) இத்தகைய இடங்களில் வாழும் பிராணிகளில் நிலத்திலும். நீரிலும் வாழும் இயல்பு கொண்ட ஒரு பிராணியும் வாழலாம் அதன் பெயரை எழுதுக?

(7) கல்லின் கீழ் காணப்படும் பிராணிகளில் விசப்பிராணி அல்லாதது எது.
(1) பாம்பு(2) பூரான் (3) மட்டைத்தேள் (4)அட்டை

(8) கற்களின் கீழ் புதிதாக முளைக்கும் தாவரம் ஒன்று காணப்படின் அதன் இலையின் நிறம் யாது.
(1) பச்சை (2) கடும்பச்சை (3) மஞ்சள் (4) சிவப்பு

(9) இப்பிராணிகள் இவ்விடங்களில் இருப்பதற்கான காரணம்.
(1) ஈரலிப்பு (2) பாதுகாப்பு (3) நிழல் (4) மேற்கூறிய மூன்றும்

**★ சரியான விடையின் கீழ் கோடிடுக?**

(10) அடிக்கடி என்பது (இணைமொழி, இரட்டைக் கிழவி) ஆகும்.

(11) அடிக்கடி என்பதன் கருத்து (எப்போதும், உடனுக்குடன்) என்பதாகும்.

(12) மாதவன் வடக்கு நோக்கிச் செல்லும்போது நிழல் அவருக்கு வலது பக்கமாக விழுந்தது. இப்போது நேரம் அண்ணளவாக.
(1) காலை 10 மணி (2) நண்பகல் 12 மணி
(3) மாலை 4 மணி

(13) தபாலுறை ஒன்றின் வலது மேல்மூலையில் காணப்படுவது.
(1) அனுப்புபவர் முகவரி (2) முத்திரை (3) பெறுபவர் முகவரி.

**★ கோலத்தை அவதானித்து விடை தருக?**

(14) 0. 0001, 0. 001, 0. 01 ..............................
(15) 15, 30, 45, 60 ..............................

(16) அனுபவமற்ற அறிவு பயன்படாது.
(1) குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளும்பாது
(2) ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது
(3) ஆறிய கஞ்சி பழங்கஞ்சி

(17) நடை, உடை பாவனைகள் மாற்றிக் கொண்டாலும் அடிப்படை இயல்பு மாறாது.
(1) கானமயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் ஆடிப்பார்த்தது.
(2) உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
(3) கேடுவரும் பின்பே மதி கெட்டுவரும் முன்னே.

(18) இங்கு வேலை வாய்ப்பு வசதி இருந்தும்வேலைதேடி வெளிநாடு செல்கின்றனர்.
(1) இக்கரை மாட்டுக்கு அக்கரைப்பச்சை
(2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
(3) ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு

★ கீழ்வருவனவற்றை ஏதோ ஒரு இயல்பின் அடிப்படையில் ஒழுங்கு பண்ணி நடுவில் வரும் சொல்லை எழுதுக?

(19) ஆண்டு, வாரம், மணி, நாள், மாதம்
(20) கோ, அன்பு, காலை, உலகம், கார்த்திகை
(21) திங்கள், வெள்ளி, வியாழன், புதன், செவ்வாய்
(22) நாவற்பழம், வாழைப்பழம், பலாப்பழம், அன்னாசிப்பழம், தேசிப்பழம்
(23) அழகான பூச்சிகள் பல வர்ணம் கொண்டது.
ண், த், ண, சி, பூ, ன, ப், ஈ, ச், து, வ..............................
(24) எரிபொருள் இன்று இயங்கும்போக்குவரத்துச்சாதனம்
வி சரவ க ண் க் ச் து டி..............................
(25) இன்று சனிக்கிழமை 3ஆம் திகதி எனின் இம்மாதம் 21 ஆம் திகதி என்ன கிழமை வரும்?

**கீழே சில பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் விடுபட்ட வரிகளை எழுதுக;**

(26) சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும் சில வேளை அதைவந்து.............................. ..
(27) கடல் மீது அவள் கொண்ட.............. .........
(28) தலைவாரிப் பூச்சூடி ..... ....................போ என்று சொன்னார் உன் அன்னை.
(29) சிலை..............................நீ
(30) சிந்தாத..............................

-ஆக்கம் சுந்தர்

குறிப்பு:-
இதற்கான விடைகளை 6.3.2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## கல்விப்பகுதி வினா இல. 07

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

---

மாணவர் முழுப்பெயர்:........ ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை: .............. ..............................
மாணவர் கையொப்பம்: ..............................

---

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 06

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(01) கு. கோபிகா, யா/ இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை.
(02) செ. தர்ஷிகா, யா/ திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
(03) கா. லக்ஷனா, யா/ கரணவாய் மணியகாரன் தோ. த. வி.
(04) பா. நிருஜா, யா/ டிறிபேக் கல்லூரி.
(05) அ. திவ்விகா, யா/ சாவ. சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
(06) நி.ஹரிலோஜனன், சென். ஜோண் பொஸ்கோ.
(07) சி. அனுஷலா, யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.
(08) த. திருக்குமரன், யா/ இந்து ஆரம்பப்பாடசாலை.
(09) சு. ரதிபா. யா/ ஏழாலை புனித இசிதோ றோ.க. த.க. பாடசாலை.
(10) யோ. தர்ஷிக்கா, யா/ இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை.
(11) து. திவாகரசர்மா, யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்.
(12) க. ராகசொரூபி, சென். ஜோண் பொஸ்கோ.
(13) க. பிருந்தா, யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.
(14) வே. நித்தியா, யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.
(15) சி. புவிசுதேஷ், சாவ. மகளிர் கல்லூரி.
(16) வி. ஜனனி, யா/ சித்திவிநாயகர் வித்தியாலயம்.
(17) ச. வாகுலன், யா/ சாவ. இந்துஆரம்பப் பாடசாலை.
(18) சி. கோபிநாத், யா/ சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்.
(19) தெ. பவனுஜா, யா/ சோதிவேம்படி வித்தியாலயம்.
(20) பா. மயூரிகா, யா/ றோ.க.த.க. பாடசாலை.
(21) யோ. கம்சன், யா/ பரியோவான் கல்லூரி.
(22) ர. சனுஜா, யா/ கன்னியர் மடம் ம.வி.
(23) த. தக்ஷனா, யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(24) ந. சுஜீவன், யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
(25) கே. ஜெகசோதி, யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி.
(26) தெ. துவாரகன், யா/ ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.
(27) யோ. கஜேந்தினி, யா/ தி.இ.த.க. பாடசாலை.
(28) சி. சிவகணேசன், யா/ பரியோவான் கல்லூரி.
(29) சி. துவாரகா, யா/ மணியகாரன் தோட்டப்பாடசாலை.
(30) மு. சஜனி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(31) சி. டினேஷன், யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
(32) ச. ஆதவன், யா/ க.இ.த.க. பாடசாலை.
(33) வ. ரம்மியா, யா/ சென். ஜோண் பொஸ்கோ.
(34) நி. குஜிந்தன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
(35) கு.பகீரதன்,யா/ திருநெல்வேலி இ.த.க.பாடசாலை.
(36) தே. றொசன், யா/ கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
(37) செ. பார்கவி, யா/ சரஸ்வதி, கனிஷ்டவித்தியாலயம்.
(38) ம. ஜெனனி, யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.
(39) ப. திவ்யந்தி, யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம்.
(40) க. நிரோஷன், யா/ அராலி சரஸ்வதி ம.வி.
(41) இ. அர்ச்சயா, யா/ சாவ. அ.மி.த.க. பாடசாலை.
(42) ச. சிந்துஜா, யா/ கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
(43) ச. ஷாமளை, யா/ இ.ம.ஆ. பாடசாலை.
(44) சோ. தர்ஷிக்கா, யா/ புனிதமரியாள் வித்தியாலயம்.
(45) சி. கஸ்தூரி, யா/ அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
(46) நா. அனோஜினி, யா/ இந்து ஆரம்பப்பாடசாலை.
(47) கு. அநித்தியா, யா/ இ.ம.ஆ. பாடசாலை.
(48) தி. கஜவரன், சென். பற்றிக்ஸ்.
(49) சி. பிறேமசாயினி, யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.
(50) ச. விவேக், சாவ. இ. ஆ. பாடசாலை.
(51) செ. நிரோஸ்வர்மன், யாழ். பரியோவான் கல்லூரி
(52) க. ராம், யாழ். தேவரையாளி, இந்துக் கல்லூரி.
(53) ச. நூர்ஜிதா, கிளி/ பளை. மத்திய கல்லூரி.
(54) கோ. அர்ச்சுனன், யாழ். சா. இ. ஆ. பாடசாலை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி

(அச்சுவேலி)

யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைத் சேவைகள் நிகழ்ச்சித்திட்ட பிரிவில் யுனிசெவ்வின் அனுசரணையுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறி இன்றும் நாளையும் நாவலர் கலாச்சார மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் (க-57)

## முத்திரை வெளியீடு

(கொழும்பு)

கொழும்பு வெஸ்லிக் கல்லூரியின் 125 வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி ரூபா 3. 50 பெறுமதியான முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

இம்முத்திரை வெளியீட்டு விழா, நாளை வெஸ்லிக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

(க-9)

## இப்படியும் திருட்டு

(அச்சுவேலி)

கட்டப்பிராய் பகுதியின் கிழக்குப்புறமாக அமைந்துள்ள கரவெட்டிக்குளம், குட்டுனி, பகுதியில் உள்ள நெல்வயல்களிலிருந்து இரவோடு இரவாக கள்வர்களினால் நெற்கதிர்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கிராமசேவர்களிடம் முறையிட்டுள்ளனர்.

இத்தகைய மனிதாபிமான மற்ற திருட்டுக்குறித்து பொது மக்கள் தரப்பில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (க-14)

## இன்று புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 6.30மணியளவில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெற உள்ளது.

மேற்படி கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை புத்தகக் கண்காட்சியை திறந்து வைப்பார்.

(க)

## புலமைப் பரீட்சை வினா இல 6 விடைகள்

1) தைப்பொங்கல்
2) JANUARY.
3) கோலமிட்டு விளக்கேற்றி கும்பிடுவார்
4) பாலெடுத்துப் பொங்கலுக்குப்பானை வைப்பார்
5) வீடு
6) தினம்
7) அழகு
8) விளக்கு -/- ஏற்றி
9) பால் -/- எடுத்து
10) கோலம் -/- இட்டு
11) பாடசாலை
12) வெண்ணிறப் பால்
13) மழைகாலம்
14) பல்கலைக்கழகம்
15) கணனி
16) தீவு
17) மணல்
18) ஒய்வூதியம்
19) கொக்கரிக்கும்
20) கன்று
21) எலிபிடித்தல்
22) சுமைசுமத்தல்
23) தேன் எடுத்தல்
24) சரி 25) பிழை
26) (3) 27) (1)
28) (2) 29) (3)
30) (2)

கேட்பினுங் கேளாத்
தகையவேகேள்வியால்
தோட்கப் படாத செவி
- குறள்

# வலம்புரி

## தொடர்ந்தும் பின்னோக்கி....

மாளிகை தீப்பற்றி எரியும் போது பிடில் வாசித்த மன்னன் போல் எதிர்க்கட்சித் தலைவர் பழையபல்லவிபாடுவதும் கொலை தீவைத்தல்,கற்பழிப்பு போன்ற நிகழ்வுகள் பற்றிக் கூறிக் கொண்டு இனப்பிரச்சினைத்தீர்வை இழுத்தடிக்கப்பார்பதுப் வேதனைக்குரிய விடயம். பதினேழு வருட ஆட்சியின் தில்லு முல்லுகள் பற்றியோ, ஆறு வருடகால அழுக்குப் படிந்த அவலங்கள் பற்றியோ அரற்றிக் கொள்ள நேரம் இது வல்ல.

உரிய இலக்கை எட்டிப் பிடிக்க பெரும் பான்மை மக்களும் நிம்மதியாக வாழ ஆளுங்கட்சியும் ஐ. தே. க வும் ஒன்றுபட வேண்டும். வரலாறுதந்த பாடத்தை உணர்ந்து தேசத்தின் விடிவுக்காய் பாடுபடவேண்டும். யார் பெரிது என்று பீற்றுவதற்கு இது வல்ல உகந்த காலம் போக்கிரித்தனமான- தேசிய அரசியலைக் கொச்சைப்படுத்தாது கொள்கைப்பிடிப்போடு செயற்பட வேண்டிய தேவை ஒன்று உண்டு.

ஐ. தே. க சொறித்தனமாகக் குலைத்துக்கொண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்கே போய்விடும். விலாங்குபோல- அரசியலில் வாழ்ந்த காலம் மலையேறிப் போகட்டும். பச்சோந்தி போல் காலத்துக்குக் காலம் முதலைக் கண்ணீர் வடித்தால்போதாது குறுகிய அரசியல் இலாபத்தை எவரும் எதிர்பார்க்கக் கூடாது.

வரலாற்று நிகழ்வின் தடங்கள் மாறா வெறுப்பை,மனக்கசப்பை தந்து வேதனைப் படுத்துவதை போக்குவது எப்போது? எப்படி? என்ற சிந்தனைத் திருப்பத்தை நாடவேண்டும். பலர் ஒன்றாய் நின்று ஒரு மனதாய் நாட்டுப்பற்றுடன் நடக்க வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம் இது இதனை நழுவவிட்டால் நாட்டிற்கு விமோசனம் இல்லை. அண்ணன்- தம்பி தகராறிற்கு மாற்றான் விலக்குப்பிடிக்கும் நிலைக்கு எம்மை இட்டுச் சென்ற அருவருக்கத்தக்க கடந்த காலங்களை எளிதில் மறந்து விடமுடியுமா? பொது மக்கள் முதுகுகளைச் சொறிந்த வண்ணம் சொகுசாக அரசியல் நடத்த முனையும்எவருக்கும்மன்னிப்பே கிடையாது.

- அன்புடன் ஆசிரியர்

# யாழ். குடாநாட்டு முன்பள்ளிகளில் பொதுவான பாடத்திட்டம் இல்லை

### -கல்வியாளர் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடாத்தப்பட்டுவரும் 535 க்கு மேற்பட்ட பாலர் முன்பள்ளிகளுக்கான பொதுவான பாடத்திட்டம் இதுவரை உருவாக்கப்படாமல் இருப்பதால் வெவ்வேறுவிதமான கற்பித்தல் முறைகள் பின் பற்றப்பட்டு வருவது குறித்து கல்வியாளர் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாலர் முன்பள்ளிகளை குடாநாட்டில் நடாத்தி வருகின்ற பதின்மூன்று அமைப்புகள் மத்தியில் ஒரு இணக்கமானதும். ஆரோக்கியமானதுமான நிலைமை உருவாகாமல் இருப்பதால். பாலர் முன்பள்ளிக்கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் அணுகப்படாமலே இருந்துவருகின்றன.

இத்தகைய நிறுவனங்கள் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான மாதாந்த மதிப்பூதியம், காகிதாதிப் பயிற்சிகதி போஷாக்குத் திட்டத்துக்கான உதவிகள் மற்றும் தடகளப் போட்டிகள், போன்றவற்றுக்கான ஊக்குவிப்புக் களையும் வழங்கிவருகின்றன.

அதேவேளையாழ்ப்பாணத்தில் இயங்கிவருகின்ற சில சர்வதேச அமைப்புகளும், சில அரசு திணைக்களங்களும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சித் திட்டங்களை நடாத்திவருகின்றன.

இருப்பினும்கூட, மொத்தமாகவுள்ள 611 முன்பள்ளி ஆசிரியர்களுள் இதுவரை சுமார் 50 சதவீதமானவர்களுக்கு மட்டுமே பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

(க-77)

### இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில்

## நீர்ப்பாசனத் திட்டம் அமுல் படுத்த பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவக்கட்டுப்பாடில்லாத பகுதிகளில்வட - கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசனத்திட்டத்தை அமுல்ப்படுத்த பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி இப்பிரதேசங்களில் 50 கோடிரூபா செலவில் 14 குளங்கள் புனரமைக்கப் படவுள்ளன.

பிரதித்தபால் தொலைத் தொடர்புகள், தொடர்பு சாதன அமைச்சரின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டின் கிழக்கு மாகாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரபாலா இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இம்மாநாட்டில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர், மாவட்ட அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள், உலக வங்கியின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட படையதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இங்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித் துணையுடன் மேற்படிதிட்டத்திற்கான உபகரணங்களை எடுத்துச் செல்வதென முடிவு செய்யப்பட்டது.

இடைநிறுத்தப்பட்ட பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

(க-60)

### சுத்தமான முறையில்

## பாண் விநியோகிக்கப்பட வேண்டும் இல்லையேல் சட்டநடவடிக்கை

### வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(மானிப்பாய்)

பாண் கொண்டுசெல்லும் பெட்டிகளின்மீது சரியான முறையில் பேக்கறியின்பெயர் எழுதப்படாமலும் தினமும் சுத்தம் செய்யப்படாமலும் பாணை விநியோகம்செய்யும் பேக்கரி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். இராசேந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; பாண் இன்று மக்களின் பிரதான உணவாக இருப்பதால் பேக்கறியில் தயாரிக்கப்படும் பாண் சுகாதாரமான முறையில் மக்களைச் சென்று அடைய வேண்டும். சைக்கிளில் பாணைக் கொண்டுசெல்பவர்கள் கடைகளில் அதனை விநியோகிக்கும்போது வந்த வேகத்தில் அவசரஅவசரமாக கைகளில் பாணை அடுக்கி விநியோகிப்பதை எங்கும் காணக்கூடியதாக உள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல்ஒன்று அண்மையில் மனிப்பாயில் இடம் பெற்றது.

இதனால் கையிலுள்ள, உடையின் முழு வியர்வையும் பாணில் படுகிறது. இதுஉடன் நிறுத்தப்பட்டு கடை உரிமையாளர்களிடம் சுத்தமான பெட்டியைப் பெற்று அதன் ஊடாக பாணை விநியோகிக்கும்படியும் கடை உரிமையாளர்கள் கண்ணாடிப்பெட்டியில் வைத்து பாணை விற்பனைசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(க)

### கடற்றொழிலாளர் சமாசத்தில்

## பெரும் பொருளாதாரப் பின்னடைவு அங்கத்தவர்களுக்கு உதவ முடியவில்லை

### செயலாளர் கவலை தெரிவிப்பு

(புலோலி)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு தொடர்ந்தும் ஏற்பட்டுவரும் பொருளாதாரப் பின்னடைவுகளால் சமாசகடற்றொழிலாளருக்கு உதவிகள் வழங்க முடியாத இக்கட்டான நிலை தோன்றி இருப்பதாக சமாச செயலாளர் கே. சூரியகுமார் கவலை தெரிவித்துள்ளார்.

21-12-99 இல் காங்கேசன் துறைமுகத்திற்கு வெளியே நீரில் மூழ்கிய மாகோ கப்பலில் இச் சமாசத்திற்கென கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான அல்வீசியா மரக்குற்றிகள் கடலில் மூழ்கிவிட்டன.

1998ஆம் ஆண்டு முல்லைக் கடலில் மூழ்கிய பிறின்சஸ் காஷ் கப்பலில் சமாசத்திற்கென கொண்டுவரப்பட்ட 15 இலட்சம் ரூபா பெறுமதியான வலை உபகரணங்கள் கடலில் மூழ்கின.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும் எதுவிதமான நிவாரணங்களும் கிடைப்பதற்கு வழி செய்யப் படவில்லை.

இதனால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் வலை உபகரணங்களைக் கூட உரிய காலத்தில் வழங்க முடியாதிருப்பதுடன், மீன்பிடி அபிவிருத்தி நடவடிக்கைகளும் பின்னடைவைச் சந்தித்திருப்பதாகவும் செயலாளர் கவலை தெரிவித்துள்ளார்.

[க-52]

## கற்பித்தல் உபகரணங்கள் அன்பளிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தினால், பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்கள்.கற்பித்தல் உபகரணங்கள் என்பவற்றைவழங்கியுள்ளது.

உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, துன்னாலை காசிநாதர்வித்தியாலயம்,கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி, அல்வாய் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை,ஆகிய பாடசாலைகளுக்கு மேற்படி ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட புத்தகங்களையும்,கற்பித்தல் உபகரணங்களையும்,வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா பாடசாலை அதிபர்களிடம்வழங்கியுள்ளார்.

(க-23)

## நிதி ஒதுக்கீடு

(நீர்வேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடம் உட்பட சகலவசதிகளும் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு.மாகாணசபை செயலாளரினால் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்துக்கு வேண்டிய போதியளவு நிலம் வைத்தியசாலையில் இல்லாமையால் மக்களிடம் நிதிசேகரித்து வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணியை வாங்குவதற்கு இவ்வைத்தியசாலையின்அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-19)

## கரணவாயில்தொடரும்திருட்டுச்சம்பவங்கள் பொது மக்கள் தரப்பில் விசனம்

(புலோலி)

கரணவாய்ப்பகுதியில்இரவு வேளைகளில் திருட்டு முயற்சிகள் அதிகரித்து வருவதாகப் பொது மக்கள் புகர் செய்துள்ளனர் இத்திருட்டுக்களால் அவர்கள் அச்சமடைந்துள்ளனர்,

கடந்த 25 ஆம் திகதி இரவு மூன்று வீடுகளில் இத் திருட்டுக் கோஷ்டியினர் திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் ஒரு வீட்டில் உடுபுடவைக்கும் இன்னொரு வீட்டில் சைக்கிளும் இளைப் பாறிய தபால் அதிபர்ரொருவரின் வீட்டில் இன்னொரு சைக்கிளையும் திருடியபோது வீட்டுக்காரர் விழித்துக் கொள்ள சைக்கிளை விட்டு திருடர்கள் ஓடிவிட்டனர்.

(க-52)

## இன்றைய சிந்தனை

''பிறரைப் பாராட்டுவதிலும் அங்கீகரிப்பதிலும் சிக்கனம் காட்டாதீர்கள்''

## ஐந்தாம் ஆண்டு புலமைப்...

(55) இ. சாஜிபானு, யாழ். கோண்டாவில் இந்து ம. வி.
(56) கு. எஜிதரன், ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாசாலை.
(57) அ. சசிகலா, யாழ். மணியகாரன் தோ. பாடசாலை.
(58) சு. கஜந்தா, யாழ். றோ. க. த. க. பாடசாலை.
(59) ந. சரண், கிளி/ பளை. மத்திய கல்லூரி.
(60) செ. கஜானனன், யாழ். சென். ஜோண். பொஸ்கோ.
(61) சி. சம்பூரணி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
(62) சு. செந்தூரன், சாவ. மகளிர் கல்லூரி.
(63) ந. சுதர்சனன், யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
(64) ஜெ. சகன்யா, யாழ். கைதடி கலைவாணி வித்தியாலயம்.
(65) சி. கிருபாலினி, யாழ். அராலி சரஸ்வதி ம. வி.
(66) இ. மீநிலா, சென். ஜோண் பொஸ்கோ.
(67) ச. சுமதி, யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
(68) சி. சுகன்யா, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ம. வி.
(69) சி. சுகதீபன், யாழ். இ. ஆ. பாடசாலை.
(70) ப. பார்த்தீபன், சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்
(71) த. அஜித்சன், யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை.
(72) ஆ. சஞ்ஜியா, யாழ். நகார்கோவில் ம. வி.
(73) பொ. கேதாரநாதன் யாழ். அ.மி.த.க. பாடசாலை
(74) ப. நிரோஷன், யாழ். இ. ஆ. பாடசாலை.
(75) ச. மயூரன், யாழ். மத்தியகல்லூரி.
(76) ஜே. மேரிரதனி கன்னியர்மடம் ம. வி.
(77) கி. துவாரகா, யாழ். இ. ம. ஆ. பாடசாலை.
(78) த. கஸ்தூரி, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
(79) வி. மதனராஜன்,யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரி
(80) தி. அனுஷராஜ், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
(81) க. சிவசொரூபன், யாழ். இ. ஆ. பாடசாலை.
(82) வே. அர்ச்சனா, யாழ். கன்னியர் மடம் ம.வி.
(83) இ. கரன், யாழ். சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்.

### திருக்கேதீஸ்வர ஆலயத்தில்

# சிவராத்திரி வழிபாடு செய்வதற்கு மன்னார்இணைப்பதிகாரிநிபந்தனை

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் சிவராத்திரி தினத்திற்கு அங்கு சென்று வணங்குவதற்கு மன்னார் பாதுகாப்பு இணைப்பு அதிகாரியினால் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக திருக்கேதீஸ்வர பரிபாலன சபையின் மன்னார்க் கிளைக்கு மன்னார் பாதுகாப்பு இணைப்பதிகாரியினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகைள் வருமாறு:

சகல பக்தர்களும் ஆலயத்திற்குள் செல்ல முடியாது. திருக்கேதீஸ்வர முகாம் பொறுப்பதிகாரியின் அனுமதி பெற்றவர்களே ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். இரவில் பூசைச் சத்தம் தவிர்ந்த வேறு எந்தச் சத்தமும் கேட்கக்கூடாது. பக்தர்கள் 2நாட்களுக்குமுன்பு மன்னார் சிவில் இணைப்பு அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையின் பிரதி, கைரேகை அடையாளத்துடன் விண்ணப்பிக்க வேண்டும், பக்தர்கள் தனித்தனியாக புகைப்படம் பிடிக்கப்படுவர், வாகனங்களில் செல்ல விரும்புவோர் வாகனங்களிற்கு விஷேட பாஸ் பெற வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளே விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிபந்தனை குறித்து ஆலய பரிபாலன சபைச் செயலாளர் கனகசிங்கத்திடம் கேட்ட போது மேற்படி நிபந்தனைகளின் மத்தியில் அடியார்கள் சிவராத்திரி பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது என்றுதெரிவித்துள்ளார்.

இதேவேளை திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வை நடத்துவது தொடர்பான மாநாடொன்று மன்னார் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றதாகவும் தெரிய வருகின்றது. (ந-4)

### விசாரணை---

யோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகர சபை உறுப்பினர்களான முகுந்தன், அரவிந்தன் ஆகியோரின் முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரகாரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கை சாரதாம்பாள் படுகொலை நிகழ்வை குறிக்குதே தவிர இந்நிகழ்வில் சம்பந்தப்பட்டவர் பற்றி எதுவும் இல்லை என்ற விடயம் ஆராயப்பட்டே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை கூடவிருக்கும் தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில் முறைப்பாட்டுக்காரர்களான அரவிந்தன் முகுந்தன் ஆகியோரை அழைப்பதென முடிவெடுக்கப்பட்டதுடன் மன்னார், வங்காலை மீனவர் கிராமத்தில் மீன்வாடிகளை இனந்தெரியாதோர் எரித்தமை தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைமேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு தொல்லைதவிர்ப்புக்குழு உத்தரவிட்டுள்ளது. (வ-4)


**ஸ்ரீ செல்வா**

யாழ். ஸ்ரான்லி வீதி,

காலை 10-30 பி.ப 2.30

அர்ஜுன், ரம்பா நடித்த

**'சுதந்திரம்'**

(புதிய வெளியீடு)

CD பிரதி

(00115)


### சொந்த...

அடிப்படைமனித உரிமை மீறல் என்று அவர் தனது வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மீளக் குடியேற அனுமதி கோரி கடிதம், எழுதியிருந்தபோதும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் [வ]

### ரோந்து...

துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போ. சுதர்சன் (வயது4) கண்ணம்மா (வயது 50), வி. அரியமலர் (வயது 36) தங்கம்மா (வயது 22) ஆகியோரே மேற்படி தாக்குதலில் காயமடைந்தவர்களாவர் (வ-108,60)

### அரசு...

அரசாங்கம் யுத்தக் கைதிகளின் விடுதலை பற்றிஎதுவும் சிந்திக்காத போதும் விடுதலைப்புலிகள் மனிதாபிமான அடிப்படையில் நால்வரை விடுதலை செய்தமை அவர்களின் நல் எண்ணத்தை எடுத்துக் காட்டுவதாகவும், அங்கு தம்மை அவர்கள் மிகச்சிறந்த முறையில் உபசரித்தமைக்காகவும் விடுதலைப்புலிகளுக்குத் தாம் நன்றி கூறுவதாகவும் தெரிவித்துள்ளார். (ந)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## மெய்வல்லுநர் போட்டி - 2000

இன்று (01 - 03 - 2000) புதன்கிழமை எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவின் மெய்வல்லுநர் போட்டியும், நாளை (02 - 03 - 2000) வியாழக்கிழமை இடை நிலைப்பிரிவின் மெய்வல்லுநர் போட்டியும் பிற்பகல் 1 – 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி/105) அதிபர், ஆசிரியர், மாணவர்


## புலிகள் தரப்பில் மூவர் உயிரிழப்பு

[வவுனியா]

இயக்கச்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் வீரவேங்கை அறிவிழி [தம்பித்துரை மேரி சுமித்திரா) முள்ளியவளை, என்ற போராளியும் வாடியடிப் பகுதியில் நேற்று முன்தினம் எதிர்பாராத மோதலில் வீரவேங்கைகளான கீர்த்தனா / அமுதப்பிரியா (கோவிந்தசாமி நிர்மலாதேவி ] கிளிநொச்சி, திலகா ]மாணிக்கம் விஜயலட்சுமி) கிளிநொச்சி. ஆகிய போராளிகளும் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் (3)

## மினிபஸ் விபத்து

(கட்டைப்பிராய்]

கட்டைப்பிராய் 3ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மினிபஸ், மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது;

பருத்தித்துறையிலிருந்து யாழ்நகர் நோக்கிவந்த மினிபஸ் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மினி பஸ்ஸும், மோட்டார் சைக்கிளும் பாரிய சேதத்திற்குள்ளானது. எனினும் தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்ப்படவில்லை [ந]

### யாழ். பஸ்---

மேலும்தெரிவிக்கையில்: மேற்படி கடைகளை அகற்றுவதற்கான காலக்கெடு இன்று வரை வழங்கப்பட்டதாகவும் ஆனால் வர்த்தகர்களின் நலனை முன்னிட்டுஇக் காலக்கெடுவை இம் மாதம் 20 ஆம் திகதி வரை பிற்போட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### யுத்தக்----

மாக கைதிகளின் விடுதலை சம்பந்தமாக அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசிற்குக் கொடுக்கவிருக்கும் அழுத்தத்திற்கு முன்னோடியாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தமது வன்னி விஜயம் குறித்து செய்தியாளர் மாநாட்டை நடத்தி, அதன்மூலம் யுத்தக் கைதிகளின் விடுதலைக்கு தாம் உதவுவதாகவும்,

இதேவேளை யுத்தக் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமே ஒழிய எங்களால் சாத்தியப்படாத ஒன்றாகும் என யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக எம்மால் ஆகப்போவது எதுவுமில்லை என்று சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் மேலும் 500 யுத்தக் கைதிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தச்கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசாங்கமே முன் முயற்சிஎடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## யாழ். நகர வீதி திருத்தத்திற்கு அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது

### ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியின் வீதி திருத்தும் பணிகள் யாவும் யாழ்.மாநகரசபையால் மட்டும் மேற்கொள்ளப்படுவதில்லை.

குறிப்பாக பிரதான வீதிகளைத் திருத்தும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையே மேற்கொள்ளவேண்டும்.

இவ் வாறு யாழ், மாநகர சபையின் ஆணையாளர் வே. பொ.பாலசிங்கம் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்.மாநகர சபையின் முக்கிய வீதிகளான பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, இராமநாதன் வீதி, வேம்படி வீதி, மாட்டீன் வீதி, நல்லூர் குறஸ் வீதி போன்றவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ் ஆண்டு திருத்துவதற்கு உத்தேசித்துள்ளது.

இதேவேளை மாநகரசபைக்குட்பட்ட ஏனைய வீதிகளைத் திருத்துவதற்குரிய நிதி கோரப்பட்டுள்ளதாகவும் அந் நிதி கிடைத்தவுடன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3)

## களுவாஞ்சிக்குடியில் 5 கிலோ எடையுள்ள கண்ணிவெடி மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் 5 கிலோ எடையுள்ள கிளைமோர் கண்ணிவெடி ஒன்றை நேற்று காலை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கண்ணிவெடி செயலிழக்கச் செய்யப்பட்டது.] செயலிழக்கச் செய்யப்பட்டபோது களுவாஞ்சிக்குடிப் பிரதேசமே அதிர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியால் செல்லும் படையினரை இலக்காக வைத்தே இக் கண்ணிவெடி பொருத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-60)

## வடக்குக் கிழக்கு ஊழியர்களுக்கு இடர்காலக்கொடுப்பனவு கிடைக்கும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் தொடரும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களிற்கான இடர் காலக் கொடுப்பனவை இவ் ஆண்டும் வழங்க அரசு அனுமதிஅளித்துள்ளது.

இதுசம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்று 1999 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதியிட்டு அரசால் வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது,

இதன் பிரகாரம் இவ் ஆண்டு 10 வீதக் கொடுப்பனவே வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்தஆண்டுகளில் 12வீதக் கொடுப்பனவுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## கூரேயின் புதிய கட்சியில் துலாஞ்சலி பிறேமதாஸா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலர் சிறிசேனகூரே ஆரம்பித்துள்ள புதிய அரசியல் கட்சியில் இணைந்து கொள்ள காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகளான துலாஞ்சலி பிறேமதாஸா கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

துலாஞ்சலியின் மகளின் பிறந்ததினவைபவத்தை முன்னிட்டு இடம் பெற்ற நிகழ்வில் துலாஞ்சலியும் சிறிசேன கூரேயும் சந்தித்த பொழுதே மேற்படி இணக்கநிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்பிரமுகர் ஒருவரது முன்முயற்சியினாலேயே இச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் இதன்போது சஜித் பிரேமதாஸா, ஹேமாபிரேமதாஸ ஆகியோர் உடனிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [க[

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் .1-30 மணிக்கு கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்விவலயப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய அதிபர் இ. மகேந்திரன் அவர்களும் கலந்து கொள்வர். (ந)

### வரப்பிரகாஷ்--

பிரகாஷ் 1998ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையில் மரணமானது தெரிந்ததே. (வ)

### இயக்கச்சி---

பட்டதாகவும் புலிகள் என அடையாளம் காணக்கூடியதாக ஒரு சடலத்தின் கையில் இலக்கத்தகடு காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இந்த இரு சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இன்று காலை ஒப்படைக்கப்படவிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-78)

### புதுவருடப்...

வெளிநாட்டு அமைச்சின் செயலர் லயனல் பெர்னாண்டோ இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர், மங்கள முனசிங்க ஆகியோர் இடம் பெற்றுள்ள இத்தூதுக்குழு ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட்வொலிபேக்கையும் தனித்தனியாக சந்தித்து பேசவுள்ளனர்.

இப்பேச்சின் போது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் விசேடசெய்தி ஒன்றும் இவர்களிடம் சமர்பிக்கப் படவிருப்பதாகவும் தகவல் அறிந்த வட்டாரங் தெரிவிக்கின்றன. (வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.